1972 சனவரி 29]

படுகின்றனவோ அப்படிப்பட்டவைகளை டெண்டர்கள்கூடக் கேட்காமல்—அது மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் என்று நிலையில் வாங்கப்படுகின்றன. இது பொதுத் துறைத் தொழிலை ஊக்குவிக்கின்ற ஒன்ருகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் மருத்துவ இலாகாவுக்கு முழு அளவுக்குப் போதுமான அளவுப் பொருட்களைத் தருவதாக இருக்கிறதா ? இல்லையென்ருல் வேறு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இவர்களால் செய்யப்படுகிற பிலிம்கள் முழு அளவுக்கு வாங்கப்படமுடியும். ஆனல் அவர்கள் தயாரிக்காத வேறு சில குறிப்பிட்ட பிலிம்கள் வேறு இடங்களிலிருந்து டெண்டர்கள் மூலமாக வாங்கப்படுகின்றன.

New Medical Colleges

* 127 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether it is a fact that the Government have given up the proposal to open more Medical Colleges in this State ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி களில் முழுமையாக பணியாளர்களும் தகுதி பெற்ற ஆசிரியப் பெருமக்களும், அதற்குத் தேவையான பல்வேறு கருவிகளும் அமைத்து, மருத்துவக் கழகத்தின் ஏற்புதலைப் பெறவேண்டி யுள்ளதாகையால் தற்போது புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கான பெருநிதி வசதி இல்லை எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்கத் திட்டம் இருந்ததே அது நடைமுறையில் இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு ஆலோசனைகள் இருக்கின்ற நிலையில் எதுவும் அரசாங்கம் நடைமுறைப் படுத்துகின்ற திட்டம் ஆக உருவாகவில்லை. எனவே, கைவிடப்படுகின்ற பிரச்னை எழவில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மாநிலத்தில் உள்ள மருத்துவ கல்லூரிகள் குறைவாக இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளினல் உருவாக்கப்படுகின்ற டாக்டர்களால் மாநிலத்தில்

உள்ள மக்களுக்கு எவ்வளவு சதவிகிதம் பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது ? இன்னும் அந்த சதவீதத்தை அதிகப் படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர்—மக்கள் விகிதாச்சாரத்தைப் பார்க்கின்றபொழுது வேறு மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் அது சிறப்பாக அமைந்திருக்கிறது. 4,400 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற வீதத்திலே இப்பொழுது இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கு சிகிச்சைகள் அளிக்கக்கூடிய முறையில் தேவையான வசதிகள் அரசாங்கத்திற்கும் இல்லை, பொதுமக்களுக்கும் இல்லை, டாக்டர்களுக்கும் இல்லை. அலோபதி முறை, யூனானி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற அளிப்பதைத் தவிர, வேறு சித்த வைத்தியம், ஹோமியோபதி முறை. யூனானி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற வசதிகள் இருக்கின்ற பகுதிகளிலும் சிறந்த பணிகளை அவர்கள் ஆற்றி வருகின்றார்கள். எனவே அலோபதி டாக்டர்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு எவ்வளவு மக்களுக்கு அவர்கள் சிகிச்சை செய்கிறார்கள் என்று பார்ப்பது சரியல்ல.

THIRU K.M. SUBRAMANIAM : Is it not a fact that last year there had been considerable restriction in the admissions even in the existing medical colleges ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is not a restriction upon the admission of students to medical colleges in the last year. Because the number of pupils who were admitted earlier is in large proportion that is actually admitted by the Central Medical Council, last year it was brought to limitation.

Operation theatres in Thanjavur Medical College Hospital.

* 128. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the date of commencement of the Thanjavur Medical College Hospital;

(b) the number of operation-theatres provided in the Hospital;

(c) whether all the operation theatres are under use; and

(d) if not the reasons thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 19—11—1965.

(இ) நான்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் உள்ளன.

(உ) இரண்டு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் பயன் படுத்தப்படுகின்றன.